බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

තෙවන වාර පරීක්ෂණය
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026
Third Term Test

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය தரம் Grade } 13 | ශ්‍රේණිය தரம் Grade } தமிழ் உயர் தரம் | පත්‍රය வினாத்தாள் Paper } I | පැය மணித்தியாலம் Hours } 3 |

அறிவுறுத்தல்கள்:
* பகுதி I இல் உள்ள முதலாம் இரண்டாம் வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களக்கு விடை தருக.

* வினாப் பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

* மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

## பகுதி I

(01) மேலுள்ள செய்யுட்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(1) வாரலெஞ் சேரி தாரனின் றாரே
அலரா கின்றாற் பெரும காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்துகோட் டியானைச் சேந்தன் தந்தை
அரியலம் புகவி னந்தோட்டு வேட்டை
நிரைய ஒள்வாள் இளைஞர் பெருமகன்
அழிசி ஆர்க்காடன்ன விவள்
பழிதீர் மாணலந் தொலைதல் கண்டே

(அ) இப்பாடலின் திணை, துறை பற்றி விளக்குக. (4 புள்ளிகள்)
(ஆ) இப்பாடலில் வாயில் மறுக்கும் தோழியின் மதிநுட்பத்தை விளக்குக.(4 புள்ளிகள்)
(இ) இப்பாடலில் இடம்பெறும் உவமையணிகளை விளக்குக. (4 புள்ளிகள்)

(2) வற்கலையின் உடையானை
மாசு அடைந்த மெய்யானை
நற் கலை இல் மதி என்ன
நகை இழந்த முகத்தானை
கல் கனியக் கனிகின்ற துயரானைக்
கண்ணுற்றான்
வில் கையினின்று இடை வீழ
விம்முற்று நின்று ஒழிந்தான்

(அ) இப்பாடல் இடம்பெற்ற சந்தர்ப்பம் யாது? (4 புள்ளிகள்)
(ஆ) இப்பாடலில் பரதன் தன்மை பற்றிக் குறிப்பிட்டுள்ளவற்றைச் சுருக்கமாக குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
(இ) இப்பாடலில் உள்ள அணியில் நீர் காணும் நயம் பற்றி விளக்குக. (4 புள்ளிகள்)

(02) (அ) பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

(ஆ) பகுதியிலுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

காயுருட்டலானார் - சூதுக் களி தொடங்கலானார்
மாய முள்ள சகுனி - பின்னும் வார்த்தை சொல்லு கின்றான்
நீ அழித்த தெல்லாம் - பின்னும் நின் னிடத்து மீளும்
ஓய் வடைந்திடாதே - தருமா! ஊக்க மெய்து கென்றான்

கோயிற் பூசை செய்வோர் - சிலையைக் கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன் - வீட்டை வைத் திழத்தல் போலும்
ஆயிரங்க ளான - நீதி யவை உணர்ந்த தருமன்
தேயம் வைத் திழந்தான் - சீச்சி! சிறியர் செய்கை செய்தான்

நாட்டு மாந்தரெல்லாம் - தம்போல் நரர்களென்று கருதார்
ஆட்டு மந்தையாமென் - றுலகை அரசரெண்ணிவிட்டார்
காட்டு முண்மை நூல்கள் - பல தாங் காட்டினார்களேனும்
நாட்டு ராஜ நீதி - மனிதர் நன்கு செய்யவில்லை

ஓரஞ் செய்திடா மே - தருமத் துறுதி கொன் றிடாமே
சோரஞ் செய்திடா மே - பிறரைத் துயரில் வீழ்த் திடாமே
ஊரை யாளு முறைமை - உலகில் ஓர் புறத்து மில்லை
சாரமற்ற வார்த்தை! - மேலே சரிதை சொல்லு கின்றோம்.

(1) கவிதையில் குறிப்பிடப்படும் சூதின் இழிவுகளை எடுத்துக்காட்டுக. (4 புள்ளிகள்)
(2) தர்மனின் நிலையை பாரதி கூறும் விதத்தை விளக்குக. (4 புள்ளிகள்)
(3) சிறந்த ஆட்சி செய்யும் தலைவனுக்குரிய இலட்சணங்கள் எவ்வாறு கவிதையில் விளக்கப்பட்டுள்ளன? (4 புள்ளிகள்)
(4) கவிதையில் காணப்படும் சிறப்பம்சங்களை எடுத்துக்காட்டுக. (4 புள்ளிகள்)

(ஆ) இப்போது காக்கா என்கின்றேன், நாளைக்க மச்சான் என்கிற காலமும் நேரமும் வந்துவிடவா போகிறது? நான் எவ்வளவு நல்லவளாகவும், அழகியாகவும் இருந்தாலும், நான் ஏழை அவங்க பணக்காரர். நான் தண்ணி, அவங்க எண்ணெய், ஒரு போத்தலுக்க இரண்டு இருந்தாலும் ஒன்று சேரவா போகிறது?

தின்ன உண்ண மட்டும் இவ்வீட்டுல ஒரு குறையும் இல்லை. இருநூறு அவணம் முன்னூறு அவணம் என்று ஒவ்வொரு வருஷமும் நெல் வருது. இந்த நிலையில் சோற்றுப் பஞ்சம் இந்த வீட்டில் எப்படி வரும்? என்று நான் யோசிப்பேன். தின்பதில் குடிப்பதில் கூட நான் ஒரு வேலைக்காரியாகத்தான் நடத்தப்படுகிறேன். எனக்கு சோறு தின்ன ஒரு பீங்கான். தேனீர் குடிக்க ஒரு கோப்பை. படுக்க ஒரு தனிப்பாய். அதற்குத் தலையணையே கிடையாது. இப்படி ஒரு நடைமுறை இந்த வீட்டில் உண்டு.

எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும் நான் என் பீங்காளைக் கழுவி எடுத்துப்போய் என் சோத்தை வாங்கிக் கொள்ள வேண்டும். அதுபோல் எல்லோரும் தேனீர் குடித்து முடிந்ததும், நான் எனது கோப்பையை கழுவி எடுத்துச் செல்ல வேண்டும். சிறைக்கைதிகளும் இப்படித்தான் என்று யாரோ கதைத்தார்கள். நானும் இவ்வீட்டில் ஒரு சிறைக்கைதியா? தேயிலைக்குத் தண்ணீர் வைப்பதும் நான். அசிரி கழுவுவது, மீன் வெட்டுவது, மரக்கறிவகை அரிவது எல்லாம் நான். உண்ணும் போதும் குடிக்கும்போதும் மட்டும் நான் ஒரு இழிந்த சாதியா எப்படி மாறுகிறேன்.

முஸ்லீம்களெல்லாம் சமமானவர்கள், சகோதரர்கள் என்று சொல்கிறார்கள். நான் மட்டும் இந்தச் சகோதரர்களில் சேரவில்லையா? என் உம்மா, ஐந்து 'வக்து'ம் ஒழுங்காகத் தொழாவிட்டாலும் நோன்பு முப்பதும் பிடிப்பா,

'தறாவீஹ்' தொழப்போவா, ஹறாம், ஹலாலுக்குப் பயந்து நடப்பா. அவ வயத்துல பிறந்து ஸல்மா என்று பெயரும் வைத்துக்கொண்ட நான் வேலைக்காரியான காரணத்தினால் தானே இழிந்தவளானேன்! என் ஆசையின்படி உடுக்க முடியவில்லை! என் எண்ணத்தின்படி நடக்க முடியவில்லை!

1. வர்க்க ரீதியான அடக்குமுறைகள் வெளிப்படும் விதம் பற்றி விளக்குக.
2. தான் அடக்கப்படுவதை தாங்க முடியாத ஆற்றாமையும் சீற்றமும் வெளிப்படுமாற்றினை விளக்குக.
3. "நான் ஏழை அவங்க பணக்காரர். நான் தண்ணி, அவங்க எண்ணெய், ஒரு போத்தலுக்க இரண்டு இருந்தாலும் ஒன்று சேரவா போகிறது?" என்ற கூற்றை விளக்குக.
4. ஆசிரியரின் மொழிநடை பற்றிக் கருத்துரைக்க.

## பகுதி II

(03) (அ) அரசனால் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பு ஏற்றவனது இலக்கணம்
(ஆ) வினை வகையால் வேறுபடுபவன்
(இ) வேறுபடும் வினையின் இயல்பு
(ஈ) பொறுப்பேற்றவனை ஆளும் விதம்
(உ) வினை செய்பவனின் வன்மை
ஆகியவற்றினை திருக்குறள் - தெரிந்து வினையாடல் எனும் அதிகாரம் எடுத்தியம்புமாற்றினை விளக்குக.

(20 புள்ளிகள்)

(04) கம்பராமாணம் - குகப்படலத்தில் குகனது கட்டளையை ஏற்று நாவாய் வருவது முதல் பரதன் நாவாயில் ஏறுவது வரையான பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
(அ) குகனின் கட்டளைப்படி வந்த நாவாய்களின் தோற்றம்.
(ஆ) பரதன் தன் படைகளோடு கங்கையைக் கடத்தல்.
(இ) நாவாயில் பயணித்த பெண்களின் தோற்றம்
(ஈ) இவற்றைக் கூறக் கையாளப்பட்ட அணிகள்.

(20 புள்ளிகள்)

(05) 'சம்பாஷணை ஒரு கலை' எனும் கட்டுரையில்
(அ) சம்பாஷணையில் பயன்படுத்தப்படும் வார்த்தைப் பிரயோகங்கள் அமைய வேண்டிய முறை
(ஆ) மோசமான சம்பாஷணைகள்
(இ) நல்ல வார்த்தைகள் இருந்தும் அவற்றை உச்சரிக்காத மக்களின் நிலை
(ஈ) கலையழகு நிறைந்த சம்பாஷணை
என்பனவற்றை வ. ராமசாமி அய்யங்கர் குறிப்பிட்டிருக்குமாற்றினை விளக்குக.

(20 புள்ளிகள்)

(06) எஸ். பொ. வின் தேர் என்னும் சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
(அ) கதைக் கருவும் கதை நிகழ்களமும்
(ஆ) ஆறுமுகத்தாரின் இயல்புகள்
(இ) மகன் குமாரசாமியின் குணாதிசயங்கள்
(ஈ) கதையின் சிறப்பம்சங்கள்

(20 புள்ளிகள்)

(07) இ.முருகையனின் இரு துயரங்கள் எனும் நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) இரு துயரங்களுக்குமிடையிலான முரண் வளர்க்கப்படும் விதம்.
(ஆ) கதையின் சிறப்பம்சங்கள்
(இ) நவீன நாடகத்தின் முக்கிய பண்புகள் வெளிப்படும் விதம்

(20 புள்ளிகள்)

(08) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

(அ) 'நகுதக்கனரே நாடுமீக் கூறுநர்...' எனும் பாடலில் வெளிப்படுத்தப்படும் பாண்டிய மன்னனின் தன்மானவுணர்வு

(ஆ) காரணமாலை ஆசிரியர் சேகுத்தம்பியின் வர்ணனைத் திறன்
(இ) இலக்கிய விமர்சனம் எனும் கட்டுரையில் நல்ல விமர்சனம் என்று கூறுவது
(ஈ) அணிகளை பொருத்தமாகக் கையாள்வதில் தேம்பாவணி ஆசிரியர் காட்டும் திறன்.
(உ) தியாகம் சிறுகதையில் கதிரேசன் செட்டியாரின் குணவியல்புகள்.